ந.க.482/2021/அ5
நாள்: .12.2021.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மயிலாடுதுறை.

## அறிவிப்பு

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்களில் காலியாக உள்ள 16 கிராம உதவியாளர் பணியிடங்கள் கீழ்கண்ட இனசுழற்சி முறையில் நிரப்பப்பட உள்ளது.

| வ. எண் | இன சுழற்சி | இனம் | முன்னுரிமை / முன்னுரிமையற்றவர் | பொது, ஆண்/ பெண் | விதவை / முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|
| 1. | 32 | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) (SCA)) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 2. | 33 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC/DNC) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 3. | 34 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (BC) | முன்னரிமையற்றவர் | பொது | - |
| 4. | 35 | பொதுப்போட்டி (GT) | முன்னுரிமை பெற்றவர் | பொது | - |
| 5. | 36 | ஆதிதிராவிடர் (SC) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 6. | 37 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC/DNC) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 7. | 38 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (BC) | முன்னுரிமையற்றவர் | பொது | முன்னாள் இராணுவத்தினர் |
| 8. | 39 | பொதுப்போட்டி (GT) | முன்னுரிமையற்றவர் | பெண் | - |
| 9. | 40 | பிற்பட்ட வகுப்பினர் - முஸ்லீம்கள் (BCM) | முன்னுரிமையற்றவர் | பெண் | ஆதரவற்ற விதவை |
| 10. | 41 | பொதுப்போட்டி (GT) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 11. | 42 | ஆதிதிராவிடர் (SC) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 12. | 43 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC/DNC) | முன்னுரிமையற்றவர் | பெண் | - |
| 13. | 44 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (BC) | முன்னுரிமை பெற்றவர் | பொது | - |
| 14. | 45 | பொதுப்போட்டி (GT) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 15. | 46 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC/DNC) | முன்னுரிமையற்றவர் | பொது | முன்னாள் இராணுவத்தினர் |
| 16. | 47 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (BC) | முன்னுரிமையற்றவர் | பெண் | - |

மேற்காணும் பணியிடங்களுக்கு,

- கல்வித்தகுதி 5-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்,
- தமிழில் பிழையின்றி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
- 01.07.2021 அன்றைய நிலையில் 21 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.
- ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் (அருந்ததியினர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) ஆகியோருக்கு 37 வயதும், இதர வகுப்பினருக்கு 32 வயதுக்குள் இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் மயிலாடுதுறை வட்டத்தினைச் சேர்ந்தவர்களாகவும், மயிலாடுதுறை வட்டத்திலேயே நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும்.

தகுதியும், விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது சுயவிவரம், கல்வித்தகுதி சான்றுகள், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பக பதிவு விபரம் ஆகியவற்றின் நகல்களுடன் விண்ணப்பதாரரின் சுய முகவரி (Self Addressed Postal Cover) எழுதப்பட்ட ரூ.25/-க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட 25X10 செ.மீ அளவுள்ள உறை ஆகியவற்றுடன் விண்ணப்பத்தினை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 19.01.2022. மாலை 5.45 மணிக்குள் மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கத்தக்க வகையில் அனுப்பி வைத்திட வேண்டும் எனவும் அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தமிழ்நாடு கிராம உதவியாளர் பணியமைப்பு விதிகளின்படி தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

03/1/22

மாவட்ட ஆட்சியர்,
மயிலாடுதுறை.

30/12/21 30/12/21 3/1/22

3.1.22